# 28.08.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

**<u>கா.ம.ந.எண்/அ2/0648/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 27.07.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 292/2026** **பொருள் எண்.01**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கால்நடை மருத்துவத் துறை - "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம்" (Jayanthi Daisy Shelter for Animals) – Ms. ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கு சொந்தமான ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பக நிலம் மற்றும் கட்டிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கொடையாக (Gift) வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார் - மேற்கண்ட நிலத்தை கொடையாக பெற்று விலங்குகள் காப்பகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்று நிர்வகிக்க அரசின் கருத்துரு மற்றும் அனுமதி வேண்டி கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி.</u>**

கடந்த *2009*ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகமானது" *(Jayanthi Daisy Shelter for Animals)* கிழக்கு கடற்கரைச் சாலை (*ECR*) மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை (*OMR*) பகுதிகளில் இருந்து மீட்கப்படும் தெருநாய்கள் மற்றும் பூனைகளுக்கு சிகிச்சை மற்றும் நிரந்தர பராமரிப்பு வழங்கி வருகிறது.

இக்காப்பகம், செங்கல்பட்டு தாலுகா, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி கிராமத்தில், சர்வே எண்கள் *113/16B, 113/19C, 113/16A* மற்றும் பட்டா எண் *2218*-இல், புல எண் *113/16A2* மற்றும் *113/16B2*-ல் மொத்தம் *7,709* சதுர அடிகள் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமைந்துள்ளது.

இந்த விலங்குகள் காப்பகம் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம்" மூலம் நிதியுதவி பெற்று, காயமடைந்த மற்றும் கைவிடப்பட்ட நாய்கள் மற்றும் பூனைகளை பராமரித்து வருகிறது. இருப்பினும், *2024-2025* நிதியாண்டுடன் அந்நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலத்தின் உரிமையாளரான *Ms.* ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின், 04.06.2026 நாளிட்ட கடிதத்தில், ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம் *(Jayanthi Daisy Shelter for Animals)* அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கொடையாக *(Gift)* எவ்வித நிதி பரிவர்த்தனையும் இன்றி வழங்க விருப்பம் தெரிவித்தும், தற்போது அங்கு பராமரிக்கப்பட்டு வரும் சுமார் *250* நாய்கள் மற்றும் *80* பூனைகளுடன் விலங்குகள் காப்பகத்தை பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்று நடத்துமாறும் கோரியுள்ளார்.

இதன் அடிப்படையில் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, *13.06.2026* அன்று தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மற்றும் கூடுதல் தலைமை கால்நடை மருத்துவ அலுவலர்கள் அடங்கிய குழுவினர் விலங்குகள் காப்பகத்தை ஆய்வு செய்தனர். ஆய்வின் போது, விலங்குகள் காப்பகத்தில் சுமார் *250* நாய்கள் மற்றும் *80* பூனைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவது உறுதி செய்யப்பட்டது.

மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் *19.05.2026* அன்று வழங்கிய உத்தரவின்படி, கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், விளையாட்டு அரங்குகள், பேருந்து நிலையங்கள், பேருந்து பணிமனைகள், இரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொது நிறுவன வளாகங்களில் உள்ள தெருநாய்கள் அகற்றப்பட்டு, அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னரும் மீண்டும் அவற்றை அதே இடங்களில் விடுவிக்காமல், அங்கீகரிக்கப்பட்ட விலங்குகள் காப்பகத்தில் வைத்து பராமரிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவினை செயல்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மணலி மற்றும் பெருங்குடி மண்டலங்களில் தலா *250* நாய்களை பராமரிக்ககூடிய இரண்டு நாய்கள் காப்பகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், பொது வளாகங்களில் இருந்து மீட்கப்படும் நாய்களை நிரந்தரமாக வைத்து பராமரிப்பதற்கு கூடுதல் நாய்கள் காப்பகங்கள் தேவைப்படுகிறது. இந்நிலையில், ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகத்தை ஏற்று நடத்துவது அவசியமாகிறது.

இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் முதுநிலை சட்ட அலுவலரின் சட்ட ஆலோசனை பெறப்பட்டதில், அறக்கட்டளைக்கு மேற்கண்ட சொத்தில் தனித்த உரிமையோ, தலைப்புரிமையோ அல்லது நலனோ இல்லை என்பதையும், சொத்தினை மாநகராட்சிக்கு கொடையாக வழங்குவதற்கு அறங்காவலர் குழுவிற்கு *(Board Trustees)* ஆட்சேபனை இல்லை என்பதையும் உறுதி செய்யும் தீர்மானத்தை அறங்காவலர் குழுவிடமிருந்து *(Board Trustees)* பெறுவது சட்டரீதியாக அவசியம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அறங்காவலர் குழுவின் *(Board Trustees)* ஆட்சேபனையின்மை *(No Objection Resolution Letter*) தீர்மானம் பெறப்பட வேண்டியுள்ளது.

இவ்விலங்குகள் காப்பகத்தை மாநகராட்சி ஏற்றுக்கொள்வதன் மூலம் தற்போது அங்கு பராமரிக்கப்பட்டு வரும் விலங்குகளின் நலன், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உறுதி செய்யப்படுவதுடன், மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்படி பொது வளாகங்களில் இருந்து மீட்கப்படும் தெருநாய்களை பராமரிப்பதற்கான கூடுதல் வசதியும் ஏற்படுத்தப்படும்.

இதற்கு முன் உதாரணமாக தொழுநோய் காப்பகம் மற்றும் மருத்துவமனை அமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்கு வெளியே உள்ள மாடம்பாக்கம் பகுதியில் சுமார் *30.35* ஏக்கர் நிலம் மறைந்த திரு *R.M.* அழகப்ப செட்டியார் அவர்களிடமிருந்து கடந்த *1946* ஆம் ஆண்டு தானமாக பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகத்தின் நிலம் மற்றும் கட்டிடங்களை சட்டப்பூர்வமாக கொடையாகப் பெற்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்ப வேண்டியுள்ளது.

எனவே,

1. செங்கல்பட்டு தாலுகா, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி கிராமத்தில், சர்வே எண்கள் 113/16B, 113/19C, 113/16A மற்றும் பட்டா எண் 2218-இல், புல எண் 113/16A2 மற்றும் 113/16B2-ல் மொத்தம் 7,709 சதுர அடிகள் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமைந்துள்ள ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகத்தை (Jayanthi Daisy Shelter for Animal) சட்டப்பூர்வ நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்டு தானமாக பெறப்பட்ட பின்னர் எவ்வித நிதி பரிவர்த்தனையும் இன்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டில் கொண்டு வந்து அக்காப்பகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும்,
2. Ms. ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கு விலங்குகள் காப்பகத்தில் உள்ள விலங்குகளின் நலனை கண்காணிக்கும் (Monitoring) பொறுப்பை வழங்கவும்,
3. விலங்குகள் காப்பகத்தின் (Jayanthi Daisy Shelter for Animal) தற்போதைய "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம்" என்ற பெயர் தொடர்வதற்கு அனுமதிக்கவும்,
4. "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம்" நிலம் மற்றும் கட்டிடத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசின் கருத்துரு மற்றும் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“21.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.065/2026, நாள்.21.08.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“24.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.156/2026, நாள்.24.08.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/1006/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 12.08.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 293/2026** **பொருள் எண்.02**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-9 பகுதி-24 வார்டு -109 சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு (02DA018NC) நியாய விலை கடைக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.</u>**

இணை இயக்குநர்/ உதவி ஆணையர் முதுநிலை, மண்டலம்-9 அவர்களின் 28.07.2026 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9 பகுதி-24 வார்டு *-109* சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் *(02DA018NC)* நியாய விலை கடைக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும், இப்பொருள் குறித்து பல்நோக்கு கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நிபந்தனை மற்றும் வாடகை அடிப்படையில் வழங்க மண்டலம்-9ன் வார்டு குழு தீர்மானம் நிறைவேற்றபட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*9*, பகுதி-*24*, வார்டு-*109*, சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 216 சதுர அடி *(12X18)* அளவுள்ள தரைதளத்துடன் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு அரசு விதிமுறைகளின் படியும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிபந்தனை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்வதற்கு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மன்றத்தின் அனுமதி பெற்று தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

மண்டலம்-9, பகுதி-24,வார்டு-109,சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 216 சதுர அடி(12*X18)* அளவுள்ள தரைதளத்துடன் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், *THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023*-விதிகளின் படி பல்நோக்கு கட்டிடத்தில் தரைத்தளம் (216 சதுர அடி) கொண்ட கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம்-9, பகுதி-24, வார்டு-109, சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 216 சதுர அடி (12x18) பரப்பளவுள்ள அறைக்கு மாத வாடகை ரூ. 1620/-+GST 18% ரூ. 292 = ஆக மொத்தம் ரூ 1912/- (ரூ.1620/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ. 19440 /-) செலுத்த வேண்டும்
2. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி விதி 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும்.
3. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்த்தப்படும்.
4. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்.
5. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09ல் செலுத்த வேண்டும்.
6. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்,

மேற்படி கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.157/2026, நாள்.24.08.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**பொ.து.ந.க.எண்.ஈ3/02449/2026**

**ஆணையாளர் அவர்களின் 18.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 294/2026** **பொருள் எண்.03**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.**

அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு-அ) துறை, நாள்.09.07.2026ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.N.சத்தியநாராயணன், மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்), மண்டலம்-5, பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு-அ) துறை, நாள்.09.07.2026. | 27.07.2026 மு.ப. |
| 2. | திரு.பெ.அரவிந்தன், மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்), மண்டலம்-2, பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு-அ) துறை, நாள்.09.07.2026. | 27.07.2026 மு.ப. |

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது."

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**FAC.NO.L&G-1/2878/2026**

**ஆணையர் அவர்களின் 24.08.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 295/2026** **பொருள் எண்.04**

**Greater Chennai Corporation – F.M.Unit - Mobilization of overdraft facility to be obtained from Nationalized Banks / Financial Institutions – Approval from Government – For Orders.**

Over the last few years, the Greater Chennai Corporation (GCC) has undertaken several infrastructure projects, including the construction of Integrated Storm Water Drain networks, strengthening of Solid Waste Management services, development of parks and public open spaces, construction of hospitals and other public buildings, road infrastructure, and various other civic improvement initiatives.

While these capital expenditures have enhanced civic infrastructure across the city, they have also resulted in substantial financial commitments towards both operational expenditure and capital works, resulting in significant stress on GCC's financial position.

Further, GCC has accumulated unpaid liabilities towards both revenue expenditure and completed capital works. As on 19.08.2026, the total value of pending bills stands at **Rs.2,090.11 crore**, comprising **Capital Bills of Rs.1,280.97 crore** and **Revenue Bills of Rs.809.14 crore**. Owing to the delay in settlement of contractor bills, several contractors have resorted to bill discounting through the Receivables Exchange of India Limited (RXIL) under the Trade Receivables Discounting System (TReDS), enabling them to obtain early payments from financial institutions.

These discounted bills must be paid by GCC within the stipulated time period, failing which GCC is required to settle these discounted bills along with the applicable financing charges, resulting in an additional financial burden over and above the original cost of the works.

The details of the pending bills as on19.08.2026 are furnished in the table below:

| PARTICULARS | TOTAL BILLS PENDING (RS. IN CR) | NON RXIL (RS. IN CR) | RXIL DISCOUNTING (RS. IN CR) |
|---|---|---|---|
| REVENUE BILLS (ADMIN, AND O&M) | 809.14 | 614.67 | 194.47 |
| CAPITAL BILLS - SCHEMES | 483.46 | 263.60 | 219.86 |
| CAPITAL BILLS - GCC FUND | 797.51 | 469.93 | 327.58 |
| **TOTAL** | **2090.11** | **1348.20** | **741.91** |

Of the pending revenue bills, the bills related to Conservancy operations are detailed below:

- Rs. 280.21 Crore pertains to payments due to **Urbaser Sumeet**,
- Rs. 66.61 Crore pertains to payments due to **Chennai Enviro Solutions & Package Six Private Limited**

It is crucial to ensure adequate cash flow availability with GCC to meet its immediate financial obligations and facilitate timely settlement of pending bills, particularly payments to agencies engaged in Conservancy Services. Adequate liquidity is also essential to support the implementation of capital projects planned in the short and medium term and to meet expenditure requirements, including those arising during the North-East Monsoon. Accordingly, to address the immediate and medium-term cash flow requirements of GCC, it is proposed to avail of an Overdraft (OD) facility

aggregating to Rs.300 crore from a bank offering the most favourable terms and interest rates. The proposed Rs.300 crore facility may be taken under the following three components:

1. **Rs.150 crore OD against Fixed Deposits (FDs):** An OD facility of Rs.150 crore may be availed against FDs created by temporarily transferring balances available in the below mentioned GCC bank accounts. The funds proposed to be utilised for creation of the FDs amount to approximately Rs.150.06 crore, as detailed below.These balances are presently earmarked for various specific purposes/projects, including Road Cut Deposits, Nirbhaya Fund, State Disaster Mitigation Fund, SWD Missing Link, CGF & OMGFF, DBFOT Toilets, Vadaperumbakkam Storm Water Drain and other schemes. The funds are not expected to be immediately required for utilisation and may therefore be temporarily placed as FDs and utilised to secure the OD facility.The identified accounts proposed for temporary transfer of funds for creation of FDs are as follows:

| Sl. No. | Name of the Account | Bank | Account No. | Funds to be Transferred (in Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Nirbhaya Fund Account | ICICI | 000901127961 | 32,98,00,000 |
| 2 | Infrastructure and Amenities Fund | Axis | 922010031545774 | 1,59,245 |
| 3 | State Disaster Mitigation Fund | Axis | 922010031555807 | 23,04,44,600 |
| 4 | CUB - NUHM Account | CUB | 500101014212602 | 2,99,31,321 |
| 5 | Special Road Programme (2020-2021) | ICICI | 000901129805 | 34,31,324 |
| 6 | CGF and OMGFF | SBI | 40827748663 | 1,31,32,133 |
| 7 | SWD - Missing Link (TNSUDP) | SBI | 40810424385 | 35,32,848 |
| 8 | Road Cut Deposits | IDFC | 10218287039 | 88,00,00,000 |
| 9 | Road Cut Charges Collection Account **(Old)** | Canara | 09762101404202 | 1,00,39,406 |
| 10 | Endowment Fund Account | IOB | 171101000003333 | 1,06,756 |
| **Total** | | | | **1,50,05,77,633** |

As the funds are linked to specific projects/works where immediate cash requirements are not expected to arise, the temporary utilisation of funds in FDs would enable GCC to leverage the available balances for meeting its immediate liquidity requirements.

However, certain funds are expected to be required over the next 3–6 months as the projects and works progress. Hence, the FD-backed OD is proposed as an interim liquidity arrangement, with the OD being repaid as and when the underlying funds are required.

2. **Rs.150 crore General Overdraft Facility:** In addition, considering the mounting pending bills and other critical expenditure requirements of GCC, along with GCC's responsibility for undertaking monsoon preparedness, emergency response, disaster mitigation and other related expenditure, it is proposed to avail a further general OD facility of Rs.150 crore. This would provide GCC with the necessary liquidity to meet its immediate and temporary cash flow requirements and ensure timely settlement of pending bills and other critical expenditures, considering its prevailing financial position.

Hence, in this regards the following is the proposed Overdraft structure:

| COMPONENT | AMOUNT IN RS. CRORE | PURPOSE |
|---|---|---|
| OD AGAINST FDS | 150 | IMMEDIATE LIQUIDITY AGAINST TEMPORARILY AVAILABLE FUNDS |
| GENERAL OD | 150 | MONSOON, DISASTER MITIGATION AND OTHER CRITICAL GENERAL EXPENDITURE |
| **TOTAL** | **300** | |

Hence, approval of the Council through Standing Committee (Taxation and Finance) are requested for the following:

1. To avail an Overdraft facility of Rs.300 crore from a Scheduled Commercial Bank offering the most favourable terms and interest rates, comprising Rs. 150 crore OD against Fixed Deposits and a General Overdraft facility of Rs. 150 crore.

2. To address a letter to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, requesting permission for GCC to avail the overdraft facility of Rs 300 crore as proposed above.

“24.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.158/2026, நாள்.24.08.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**நி.நி.பி.ந.க.எண்.க(ம)மா-1/532/2023**

**ஆணையர் அவர்களின் 27.07.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 296/2026** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி – 25.10.2011 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியங்கள் மாநில நிதி மான்யத்திலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குனரகம் வழியாக மாநகராட்சிக்கு வழங்கப்படும் பகிர்வு நிதியிலிருந்து பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அலுவலகம் (நந்தனம், சென்னை-600 035) வழியாக வழங்கியது - செ.அ.ஆ.60ன்படி மாநில நிதி மான்யம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நேரடியாக விடுவிக்க அறிவித்தது - ஏப்ரல் 2012 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றத் தீர்மானம் பெற்று வழங்கப்பட்டு வருவது – மீண்டும் 10 எண்ணிக்கையிலான பேரூராட்சிகளிலிருந்து ஓய்வு பெற்ற 27 எண்ணிக்கையிலான ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியங்களை . ஜனவரி 2026 முதல் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வழங்க கோரியது - மற்றும் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2026, குடும்ப பாதுகாப்பு நலநிதித் திட்டம் 2022ன் படி பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுடன் இணைக்கப்பட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அமல்படுத்த மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகரட்சியுடன் இணைக்கப்பட்ட 1) ஆலந்தூர், 2) புழுதிவாக்கம், 3) அம்பத்தூர், 4) கத்திவாக்கம், 5) திருவொற்றியூர், 6) மாதவரம், 7) மதுரவாயல், 8) வளசரவாக்கம், 9)மணலி மற்றும் 10)வேளச்சேரி ஆகிய நகராட்சி / பேரூராட்சிகளில் பணிபுரிந்தவர்களுக்கான ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியங்களுக்கான நிதி, தமிழ்நாடு அரசு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கும், மாநில நிதி மான்யத்திலிருந்து (இம்மான்யம் அரசிடமிருந்து நேரடியாக, நகராட்சி நிருவாக இயக்குனரகத்திற்கு வழங்கப்படும்) உள்ளாட்சி நிதித் தணிக்கையில் கோரும் ஓய்வூதிய கேட்பில் உள்ள தொகைகளை, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பிடித்தம் செய்து கொண்டு, மீதத்தொகையை மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கி வந்தது. அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள் / பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திற்கான பட்டிகள் நேரடியாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை (நந்தனம், சென்னை . 35) வாயிலாக அனுமதிக்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டு வந்தது.

*2)* அரசாணை நிலை எண்.60 நிதி *(SFC-MC)* துறை 28.02.2023 நாளிட்ட. அரசாணையில் 6வது மாநில நிதிக்குழு மான்யம் பெறுவது குறித்து பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக மாநில நிதிக்குழு மான்யத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் விடுவிக்கப்படக்கூடாது எனவும், மற்ற துறைகளைப் போலவே, பெருநகர

சென்னை மாநகராட்சியும் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்று வாரியமும் தங்கள் நிதியினை கருவூலத்திலிருந்து நேரடியாகப் பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

3) அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியே தொடந்து வழங்க முடிவு செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.88/2024 நாள்.26.07.2024ல், **ஏப்ரல் 2023 முதல்** உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கேட்பின் படி தொடர்ச்சியாக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியர்களுக்கான கேட்புத் தொகை பொதுத்துறை ஓய்வூதிய பிரிவிலிருந்து அனுமதிக்கப்பட்டு வருகிறது.

4) சிறப்பு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை.10.07.2026 நாளிட்ட கடிதத்தில் அடையார், அம்பத்தூர், அமைந்தகரை, மணலி, சின்னசேக்காடு, மதுரவாயல், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம், போரூர், புழல் மற்றும் வேளச்சேரி ஆகிய பேரூராட்சிகள், பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டதால், பேரூராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் 10 நபர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 17 நபர்களுக்கும், ஜனவரி 2026 முதல் ஜுன் 2026 முடிய உள்ள மாதங்களுக்கான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய செலவினமாக வழங்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.23,69,779/. விடுவிக்குமாறு நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

5) மேலும், எதிர்வரும் மாதங்களுக்கு தொடர்ச்சியாக, மேலே பத்தி-4ல் குறிப்பிட்டுள்ள பெருநகர மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பேரூராட்சியிலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அனுமதிக்கப்படும் ஓ'ய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய தொகைக்கான கணக்கீடு உள்ளாட்சி நிதி தணிக்கையிலிருந்து அனுப்பப்படும் கேட்பில் குறிப்பிடும் தொகையை அனுமதித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வங்கி எண். 130701000012041 ( *IFSC CODE No.IOBA0001307* ) என்ற வங்கி கணக்கிற்கு தொகையினை விடுவித்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

6) இதன்மீது சமர்பித்துக் கொள்வது, மேலே பத்தி-1ல் குறிப்பிட்டுள்ள 10 எண்ணிக்கையிலான நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் பெருநகர சென்னை மாநரகாட்சியுடன் 25.10.2011 முதல் இணைக்கப்பட்ட காரணத்தால், இணைக்கப்பட்ட நகராட்சி / பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத்திற்கான நிதி பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது, இந்நிலையில் தற்போது மேலே பத்தி-4ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி/ பேரூராட்சிகள் ஏற்கனவே ஊராட்சி/ நகராட்சியாக இருந்த போது பத்தி -1ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி/ பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது பணியாளருக்கான ஊதியங்கள் மட்டுமே, புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி/பேரூராட்சியில் வழங்கப்பட்டு வந்தது, ஓய்வூதியங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் மாநில நிதி பகிர்விலிருந்து பெற்று

நேரடியாக ஓய்வூதியங்கள் அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மாநில நிதி பகிர்வு அந்தந்த மாநகராட்சிகளுக்கு நேரடியாக வழங்கப்படுவதால், தற்போது ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வழங்க வேண்டியுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட அடையார், அம்பத்தூர், அமைந்தகரை, மணலி, சின்னசேக்காடு, மதுரவாயல், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம், போரூர், புழல் மற்றும் வேளச்சேரி ஆகிய நகராட்சி/ பேரூராட்சியிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் (10 நபர்கள்) / குடும்ப ஓய்வூதியம் (17 நபர்கள்) பெறுபவர்களுக்கு ஓய்வூதியங்கள் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து (*SFC Grant)* வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

அ) சிறப்பு இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கையின் 10.07.2026 மற்றும் 13.08.2026 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, ஜனவரி 2026 முதல் ஜூன் 2026 முடிய உள்ள மாதங்களுக்கான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய செலவினமாக வழங்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.23,69,779/-யை RTGS வழியாக அனுப்பி கொள்ளவும், இனிவரும் மாதங்களுக்கும் தொடச்சியாக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதிய தொகைகளை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, சென்னை- 35க்கு செலுத்திக் கொள்ளவும்,

ஆ) மேலும், மாதந்தோறும் தோராயமாக ரூ.3.95 இலட்சம் அளவில் செலவினம், இருப்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி பொதுத்துறை (ஓய்வூதியப் பிரிவின்) கீழ் ஏற்கனவே, உருவாக்கப்பட்டுள்ள கணக்கு தலைப்பு எண்.00-02-01/210-300-101 (Pension added Area)லிருந்து ஓய்வூதிய தொகையினை விடுவித்திடவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.169/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.15ந.க.எண்.பி1/3264/2026</u>**

**<u>ஆணையர் அவர்களின் 04.08.2026 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்: 297/2026** **பொருள் எண்.06**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 15, பகுதி – 44, கோட்டம் – 199 சோழிங்கநல்லூர் பகுதியில் இஸ்லாமிய சமூகத்திற்கு அடக்கஸ்தலம் அமைக்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இஸ்லாமிய சமூகத்தினரால் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டதில் இஸ்லாமிய அடக்கஸ்தலம் அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது - சோழிங்கநல்லூர் -1 கிராமத்தில் புலத்தணிக்கை செய்யப்பட்டதில் புல எண்.236/19ல் வருவாய் கணக்கில் வகைப்பாடு அரசு புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 217.50 ஏர்ஸ் (21700 ச.மீ பரப்பளவு) மயானம் என தாக்கலாகி உள்ளது - இவ்விடத்தில் இஸ்லாமிய அடக்கஸ்தலம் அமைக்க 2023 ச.மீ பரப்பளவு ஒதுக்க மன்றத்தின் அனுமதி.</u>**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இஸ்லாமிய சமூகத்தினர் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.*C.P.No.2954/2025*-க்கு 09.01.2026 நாளிட்ட தீர்ப்பாணையில் உடனடியாக நிலம் ஒதுக்கீடு செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

இது குறித்து பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம்-15, பகுதி-44, கோட்டம்- *199* சோழிங்கநல்லூர் 1 கிராமத்தில் புல எண்.236/19ல் வருவாய் கணக்கில் வகைப்பாடு அரசு புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 217.50 ஏர்ஸ் (21700 ச.மீ பரப்பளவு) மயானம் என தாக்கலாகி உள்ளது. இந்நிலத்தில் இஸ்லாமிய அடக்கஸ்தலம் செய்திட 2023 ச.மீ பரப்பளவு ஒதுக்க 16.07.2026 அன்று நடைபெற்ற 15வது மண்டல வார்டுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி, மண்டலம் *- 15*, பகுதி *- 44*, கோட்டம் *- 199* சோழிங்கநல்லூர் *1* கிராமத்தில் புல எண்*.236/19*ல் வருவாய் கணக்கில் வகைப்பாடு அரசு புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் *217.50* ஏர்ஸ் *(21700* ச.மீ பரப்பளவு*)* மயானத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலும், *15*வது மண்டல வார்டுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலும், இஸ்லாமிய சமூகத்திற்கு அடக்கஸ்தலம் அமைக்க 2023 ச.மீ பரப்பளவு ஒதுக்கிட, நிலைக்குழு (பொது சுகாதாரம்*)* மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி*)*வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.066/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.159/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.நக.எண்.சி2 / 1530 / 2026**

**ஆணையர் அவர்களின் 14.03.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 298 / 2026** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, பகுதி - 9, கோட்டம் 34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம் - 5 லிருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 746 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 உடன் முடிவடைவதால் 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 746 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும் , வள்ளலார் நெடுஞ்சாலை உள்ளடக்கிய 11.8 கி.மீ நீளமுள்ள 16 பேருந்து சாலைகள் மற்றும் 131.2 கி.மீ நீளமுள்ள 949 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4க்குட்பட்ட பகுதிகளில், முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், உணவகங்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேலும், KDG பகுதியில் அதிகப்படியான குப்பைகள் தேக்கம் அடைவதாலும், பொதுமக்களுக்கு தொற்று நோய் ஏற்படாமல் தவிர்ப்பதற்கும் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்-4, பகுதி-9, கோட்டம்–34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஜியில் 249 நிரந்தர பணியாளர்கள் மற்றும் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம்-5லிருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 746 தூய்மை பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 09.02.2018 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை -6 அவர்களின், கடித எண் செ3/5476/2024-3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள *corrigendum* ல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட *The DA is linked to the Average Consumer*

*Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance* ன் படி அகவிலைப்படி ரூ.6593/- ம் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic Wages*ன்படி தினக்கூலியாக ரூ.761/- என கணக்கிடப்பட்டுள்ளது-

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், *10.07.2024* நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மற்றும் *NMR* கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, *05.07.2024* முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.*753/-* வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், *01.04.2025* முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.*761/-* என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-4, பகுதி-9, தூய்மை துறையில் கோட்டம் - 34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஜியில் மேற்கண்ட 561 தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் *(SHG)* மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.1249/2025, நாள்.19.12.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டலம்-5ல் இருந்து 23.01.2026 அன்று 350 தற்காலிக *(SHG)* தூய்மை பணியாளர்களும், 29.01.2026 அன்று 200 தற்காலிக *(SHG)* தூய்மை பணியாளர்களும் மண்டலம்-4ற்கு அனுப்பப்பட்டனர். இப்பணியாளர்களுக்கு 23.01.2026 முதல் 28.02.2026 வரையிலான காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.190/2026, நாள்.20.02.2026-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது-

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 746 *SHG* தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 அன்றுடன் முடிவடைவதால், 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மண்டலம்-5 லிருந்து பெறப்பட்ட *SHG* பணியாளர்கள் உட்பட 746 *SHG* பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது

<u>அட்டவணை</u>

<u>துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு</u>

| வ.எண் | கோட்டம் | மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை | மன்றத்தீர்மானம் பெறப்பட்ட *SHG* பணியாளர்கள் எண்ணிக்கை | மண்டலம் -5 ல் இருந்து கூடுதலாக அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை(*SHG*) | மொத்த தற்காலிக தூய்மை (*SHG*) பணியாளர்களின் எண்ணிக்கை | தலைமை பொறியாளர் (*SWM*) அவர்களின் நாள் *10.08.2023* சுற்றறிக்கை (தி.க.மே.து.ந.க.எண்.அ3/3974/2023) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | 34 | 165 | 45 | 132 | 41 | 173 | ரூ.761/- | ரூ.761/- x 746 (SHG தூய்மை பணியாளர்கள்) x 92 நாட்கள் = ரூ.5,22,28,952/- |
| 2 | 35 | 150 | 57 | 107 | 36 | 143 | | |
| 3 | 36 | 130 | 42 | 107 | 35 | 142 | | |
| 4 | 37 | 140 | 56 | 114 | 32 | 146 | | |
| 5 | 38 | 103 | 47 | 69 | 41 | 110 | | |
| 6 | KDG | 55 | 22 | 32 | 0 | 32 | | |
| மொத்தம் | | 743 | 249 | 561 | 185 | 746 | | |

எனவே, மண்டலம்-*4*, பகுதி-*9*, கோட்டம்-*34* முதல் *48* வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (*SHG*) மூலமாக *746* தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள *01.03.2026* முதல் *92* நாட்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்-*4*, பகுதி-*9* கோட்டம்-*34* முதல் *38* வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகள் மேற்கொள்ள மண்டலம்-*5* லிருந்து பெறப்பட்ட *SHG* பணியாளர்கள் உட்பட *746* பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (*SHG*) மூலமாக *01.03.2026* முதல் *92* நாட்களுக்கு எடுத்துக்கொள்ள அனுமதியும், |
| (ஆ) | ஆணையர் அவர்களின் *05.12.2025* நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.*761/-* வீதம் *746* நபர்கள் *x 92* நாட்கள் *x* ரூ.*761/-* = ரூ.*5,22,28,952/-* ( ரூபாய் ஐந்து கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்) அனுமதியும், |
| (இ) | தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் *SHG* தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |

| | |
|---|---|
| (ஈ) | தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| (உ) | நிதி ஆலோசகர் மூலமாக ரூ.5,22,28,952/- (தலைப்பு எண்: 40-41-03 payment to casual staff conservancy works , கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், |
| (ஊ) | மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது |

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.067/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.160/2026, நாள்.27.08.2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4.ந.க.எண்.சி2 / 1531 / 2026**

**ஆணையர் அவர்களின் 14.03.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 299 / 2026** **பொருள் எண்.08**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4 , பகுதி -10 , கோட்டம் 39 முதல் 43 வரை தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம்-5 ல் இருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 455 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 உடன் முடிவடைவதால் 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 455 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை உள்ளடக்கிய 17.75 கி.மீ நீளமுள்ள 16 பேருந்து சாலைகள் மற்றும் 131.2 கி.மீ நீளமுள்ள 1057 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, காசிமேடு சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம் -4 , பகுதி -10 , கோட்டம் – 39 முதல் 43 வரை 303 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 455 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 09.02.2018 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை-6 அவர்களின், கடித எண் செ3/5476/2024-3 , நாள்: 02.05.2024 ல் தெரிவித்துள்ள *corrigendum*ல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட *The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance* ன் படி அகவிலைப்படி ரூ.6593/- ம் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic Wages*ன் படி தினக்கூலியாக ரூ.761/- என கணக்கிடப்பட்டுள்ளது-

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மற்றும் *NMR* கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, 05.07.2024 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2025 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.761/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-4, தூய்மை துறையில் கோட்டம் - 39 முதல் 43 வரை மேற்கண்ட 266 தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் *(SHG)* மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு, மன்றத் தீர்மான எண்.1249/2025, நாள்.19.12.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் -5ல் இருந்து 23.01.2026 அன்று 350 தற்காலிக *(SHG)* தூய்மை பணியாளர்களும் 29.01.2026 அன்று 200 தற்காலிக *(SHG)* தூய்மை பணியாளர்களும் மண்டலம்-4 ற்கு அனுப்பப்பட்டனர். இப்பணியாளர்களுக்கு மன்ற தீர்மானம் பெறுவதற்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. கோப்பு எண்: *C2/867/2026 / E-office no : 693714*

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 455 *SHG* தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 அன்றுடன் முடிவடைவதால், 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 455 *SHG* பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

<u>துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு</u>

| வ.எண் | கோட்டம் | மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை | மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை | மண்டலம் -5 ல் இருந்து கூடுதலாக அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை (SHG) | மொத்த தற்காலிக தூய்மை (SHG) பணியாளர்களின் எண்ணிக்கை | தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண். அ3/3974/2023) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | 39 | 87 | 56 | 51 | 41 | 92 | | |
| 2 | 40 | 93 | 53 | 52 | 33 | 85 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 41 | 101 | 63 | 47 | 33 | 80 | ரூ.761/- | ரூ.761/- x 455 (SHG தூய்மை பணியாளர்கள்) x 92 நாட்கள் = ரூ.3,18,55,460/- |
| 4 | 42 | 102 | 73 | 48 | 41 | 89 | | |
| 5 | 43 | 100 | 58 | 68 | 41 | 109 | | |
| மொத்தம் | | 483 | 303 | 266 | 189 | 455 | | |

எனவே, மண்டலம் -4, பகுதி -10, கோட்டம்-39 முதல் 43 வரை தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 455 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.03.2026 முதல் 92 நாட்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்-4 , பகுதி -10, கோட்டம்-39 முதல் 43 வரை தூய்மை பணிகள் மேற்கொள்ள மண்டலம்-5ல் இருந்து பெறப்பட்ட 455 SHG பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 01.03.2026 முதல் 92 நாட்களுக்கு எடுத்துக்கொள்ள அனுமதியும், |
| (ஆ) | ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 455 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.761/- = ரூ.3,18,55,460/- (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நானூற்று அறுபது மட்டும்) பெற அனுமதியும், |
| (இ) | தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,, |
| (ஈ) | தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| (உ) | நிதி ஆலோசகர் மூலமாக ரூ.3,18,55,460/- (தலைப்பு எண்: 40-41-03 payment to casual staff conservancy works , கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், |
| (ஊ) | மன்ற தீர்மானம் பெறப்பெற்ற 455 தற்காலிக தூய்மை பணியாளர்கள் விடுப்பு துய்க்கும் பட்சத்தில் 10 சதவீதம் பதிலி பணியாளர்களை பணியமர்த்துவதற்கு அனுமதி வேண்டியும், |
| (எ) | மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது. |

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.068/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.161/2026, நாள்.27.08.2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.4நக.எண்.சி2/1532/2026**

**ஆணையர் அவர்களின் 14.03.2026 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்: 300/2026** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -4 - கோட்டம் 44 முதல் 48 வரை தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம் -5ல் இருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 496 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 உடன் முடிவடைவதால் 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 496 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர் மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்ப்பேட்டை நெடுஞ்சாலை உள்ளடக்கிய 17.75 கி.மீ நீளமுள்ள 16 பேருந்து சாலைகள் மற்றும் 131.2 கி.மீ நீளமுள்ள 1057 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, காசிமேடு சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்-4, பகுதி -11 , கோட்டம் – 44 முதல் 48 வரை 287 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 496 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை சென்னை மாநகராட்சி ஆணையர், அவர்களின் 09.02.2018 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை-6 அவர்களின், கடித எண்.செ3/5476/2024-3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள *corrigendum* ல் அரசாணை எண்.62 ல் சுட்டிக்காட்டப்பட்ட *The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance* ன் படி அகவிலைப்படி ரூ.6593/- ம் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic Wages*ன்படி தினக்கூலியாக ரூ.761/- என கணக்கிடப்பட்டுள்ளது-

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மற்றும் *NMR* கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே , 05.07.2024 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2025 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.761/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-4, தூய்மை துறையில் கோட்டம் - 44 முதல் 48 வரை மேற்கண்ட *320* தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் *(SHG)* மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.1249/2025, நாள்.19.12.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டலம்-5ல் இருந்து 23.01.2026 அன்று 350 தற்காலிக *(SHG)* தூய்மை பணியாளர்களும் 29.01.2026 அன்று 200 தற்காலிக *(SHG)* தூய்மை பணியாளர்களும் மண்டலம்-4ற்கு அனுப்பப்பட்டனர். இப்பணியாளர்களுக்கு 23.01.2026 முதல் 28.02.2026 வரையிலான காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.190/2026, நாள்.20.02.2026-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது-

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட மண்டலம்-5ல் இருந்து பெறப்பட்ட *SHG* பணியாளர்கள் உட்பட 496 *SHG* தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 அன்றுடன் முடிவடைவதால், 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 49*6 SHG* பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்-*4* அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது

**<u>அட்டவணை</u>**

**<u>துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு</u>**

| வ.எண் | கோட்டம் | மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை | மன்றத்தீர்மானம் பெறப்பட்ட *SHG* பணியாளர்கள் எண்ணிக்கை | மண்டலம் -5 ல் இருந்து கூடுதலாக அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை *(SHG)* | மொத்த தற்காலிக தூய்மை *(SHG)* பணியாளர்களின் எண்ணிக்கை | தலைமை பொறியாளர் *(SWM)* அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண்.அ3/3974/2023 ) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | 44 | 94 | 41 | 69 | 36 | 105 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 45 | 114 | 56 | 84 | 36 | 120 | ரூ.761/- | ரூ.761/- x 496 (SHG தூய்மை பணியாளர்கள்) X 92 நாட்கள் = ரூ.3,47,25,952/- |
| 3 | 46 | 99 | 43 | 77 | 35 | 112 | | |
| 4 | 47 | 88 | 66 | 52 | 33 | 85 | | |
| 5 | 48 | 93 | 81 | 38 | 36 | 74 | | |
| மொத்தம் | | 488 | 287 | 320 | 176 | 496 | | |

எனவே, மண்டலம்-4, பகுதி -11, கோட்டம்-44 முதல் 48 வரை தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 496 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 92 நாட்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்-4, பகுதி -11, கோட்டம்-44 முதல் 48 வரை தூய்மை பணிகள் மேற்கொள்ள 496 SHG பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 92 நாட்களுக்கு எடுத்துக்கொள்ள அனுமதியும், |
| (ஆ) | ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/- வீதம் 496 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.761/- = ரூ.3,47,25,952/- (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்) பெற அனுமதியும், |
| (இ) | தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |
| (ஈ) | தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| (உ) | நிதி ஆலோசகர் மூலமாக ரூ.3,47,25,952/- (தலைப்பு எண்: 40-41-03 payment to casual staff conservancy works, கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், |
